# ஏரேமியாவின் புலம்பல்

Lamentation

X

JOSE RAGUL BENNI

# ஏரேமியாவின் புலம்பல்

**முன்னுரை:**

பழைய ஏற்பாடு நமக்கு சட்டமாய் இருப்பதில்லை. ஆனால் பல காரியங்களை கற்று தருகிறது(ரோம 15:4). நமக்கு எச்சரிப்புண்டாகவும் இருக்கின்றன (1கொரி 10,11). இஸ்ரவேலர்கள் செய்த தவறுகள், தேவ மனிதர்களை பற்றி, பொறுமையுடையவர்களாக தேவனை நம்பினவர்கள் எப்படி வாழ்த்தார்கள் என்பதை பழைய ஏற்பாடு நமக்கு கற்று தருகிறது. இவைகள் நமக்கு பிரயோஜனம் உண்டாக்குகிறதாக உள்ளது.

**புத்தக குறிப்புகள்:**

a) **ஆசிரியர்** = ஏரேமியா (யெகோவா நிலைநாட்டுகிறார் அல்லது யெகோவா நியமிக்கிறார்)
b) ஏரேமியா ஏசாயாவை போல தெற்கு ராஜ்யமாகிய யூதாவில் அந்நிய வல்லமை எருசலேமை அழிக்க போவதாக அச்சுறுத்தி கொண்டிருக்கையில் ஊழியம் செய்தார்.
c) இவர் யோசியா தொடங்கி சிதேக்கியா சிறைப்பட்டு(யூதா) போகும் வரை அவருக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று( ஏரே1;3)
d) இவரின் காலத்தில் மக்களின் இருதயம் கடினப்பட்டிருந்தன.
e) இவர் "அழும் தீர்க்கதரிசி" என்று அறியப்படுக்கின்றார்(ஏரே 9: 1,2) மக்களின் மன கடினத்திற்காக இயேசுவும் அழுதார்.( லூக் 19 : 41)

**புஸ்தக பிண்ணனி**

a) "புலம்பல்" என்பது "அழுதலை" அர்த்தபடுத்துகிறது. இது கண்ணீர் விடுதல், கவலையை வெளிப்புறமாக வெளிப்படுத்தல். என்பதை குறிக்கிறது (வெளி18:9) ஆங்கிலத்தில் lamentation (புல 2:5)
b) பாடல் வடிவில் எழுதப்பட்டது.
c) எருசலேமின் அழிவை பற்றிய புலம்பல் (1:1; 5:22)
d) இதை எபிரெயர்கள் மனப்பாடம் செய்திருத்தனர் மற்றும் இதை ஆப் மாதம் ஒன்பதாம் நாளில் மனப்படமாய் ஒப்புவிக்கின்றனர் அல்லது சத்தமாய் வாசிக்கின்றன.

**சிறப்பு குறிப்புகள்**

a) ஏரேமியாவின் ஊழியம் யோசியா தொடங்கி சிதேக்கியம் வரை இருந்தது.( ஏரே 1:3).
b) யோசியாவும் ஏரேமியாவும் ஒரே சிந்தை உடையவர்களாக, தேவனை நேசிக்கிறவர்களாக இருந்தனர். யோசியா தேவனுடைய வார்த்தைக்கு மனதை திறந்திருந்தார் (2 இராஜ22:1,2). இவரின் மரணத்தின் போது ஏரேமியா புலம்பினார்.(2நாள 35:25)
c) ஏரேமியாவின் பிரசங்கம் மக்கள் அவர் மீது கோபம் அடைய செய்தது மக்கள் அவரை கொலை செய்ய முயற்சி செய்தனர் (ஏரே 26:6,7,14). உண்மையான ஊழியர்கள் மக்களால் கண்டிப்புக்குள் ஆகிறார்கள் (லூக் 4:28,29; யோவா 8:59;அப்4:15-20;அப்14:19-21).

*d) யோசியாவிற்கு பிறகு வந்த ராஜா யோயாக்கிமினால் ஏரேமியா வெறுக்கப்பட்டார்.*

*e) அதற்கு பின்பு வந்த ராஜா சிதேக்கியா ஏரேமியாவிற்கு சாதகமாய் இல்லை. மக்கள், அதிகாரிகள் இன்னும் ஏரேமியாவை வெறுத்தனர்.*

*f) பாபிலோனியர் எருசலேமை பிடித்த பின் ஏரேமியாவை விடுதலை செய்து அவரை மரியாதைவுடன் நடத்தினர். அவரின் விருப்பத்திற்கு அவர் எருசலேமில் இருக்கிறார? அல்லது பாபிலோனிற்கு செல்கிறார? என கேட்டனர். அவரின் விருப்பத்தின் படி எருசலேமை தேர்த்தெடுத்தார்(ஏரே39:11-14;40:4-6)*

**அதிகாரம் 1**

1. *நாம் திருப்பப்பட இயலாத இழப்பு ஒன்றை அடைந்த ஒருவர் கட்டுப்படுத்த இயலாதபடிக்கு அழுவதை நினைத்து பார்க்க வேண்டும்.*
2. *எருசலேமின் அழிவுக்கு பின்பு அங்கு இருந்த ஏரேமியா எருசலேமின் நிலைபார்த்து அழுதார், புலம்பினார். ( 1:1). இதற்கு காரணம் பாவமே*

## ***பாவமே விழச்செய்கிறது( ஏரே 40:3;புல1:5,8)***

***(1:1-11)***

1. *தேவன் பாவத்தை வெறுக்கிறார். தேவனுடைய பார்வையில் பாவம் என்பது அழுகிய புண்னை போல, சீல் பிதுக்கப்படாத புண்னை போல அருவருப்பானதாக உள்ளது (எசா1:6;சங்38:4,5;ஏரே30:12)*
2. *பாவமே தேவனையும் நம்மையும் பகைஞராக மாற்றுகிறது, பிரிக்கிறது (எசா59:1,2;எசா 64:7; தானி9:14;ரோம 5:10-12)*
3. *தேவன் நம்மீது வைத்த அன்பின் காரணமாய் பொறுமையாய் இருக்கிறார். அவருடைய பொறுமைக்கு அளவு இருக்கிறது. (2 பேது3:9-14;2 தெச1:7-10)*
4. *எருசலேம் எப்படிபட்டதாக இருந்தது என்பதையும் பாவத்தினால் வரும் ஆக்கினைக்கு பின்பு எப்படி இருக்கிறது என்பதை (1-11) யில் பார்க்கிறோம்.*
5. *(1:1) 'ஜனம் பெருந்தநகரி'(எருசலேம்) தனிமையாக உட்கார்திருக்கிறளே 'சீமைகளில் நாயகி' (ராணி,இளவரசி) கப்பங்கட்டுகிறாள்*
6. *(1:4)'பண்டிகையின் போது மக்கள் அதிகமாக இருக்கும் வாசல்கள் (அப் 2:5,6).ஆனால் இப்பொழுது அந்த வாசல்கள் அழுகின்றன.*
7. *(1:8) கனம் பண்ணினவர்கள் அசட்டைபண்ணுகிறார்கள்.(1:2) சிநேகிதர் துரோகிகள் சத்துருக்கள் ஆனார்கள் ( வெளி 17:16)*
8. *முடிவை நினையாதிருந்தாள் (எசா 3:16)தாழ்த்தப்பட்டுப்போனாள் (எசா3:16-18;ஏரே4:40,31)*
   *a) 'பலிபீடத்திலிருந்து வேறொருவன்: ஆம், சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள் என்று சொல்லக்கேட்டேன்'.*
   *b) வெளிப்படுத்தின விசேஷம் 16:7*

## *அதிகாரம் 2*

## *தேவனின் உக்கிரமான கோபம் (புல2:1,2; வெளி14:10)*

***"அவர் தமது உக்கிரகோபத்திலே இஸ்ரவேலின் கொம்பு முழுவதையும் வெட்டிப்போட்டார்-*** *புலம்பல் 2:3"*

1. *தேவன் தயவுள்ளவர் என்பதோடு அவர் கண்டிப்புள்ளவர் என ரோமர் 11:22-யில் பார்க்கிறோம். நாம் தேவனுடைய கோபாக்கினையின் நிமித்தம் நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் (எபே5:6). சத்தியத்திற்கு கீழ்படியாதவர்களுக்கு கோபக்கினை வரும் (எபே 2:3; ரோம 2:8).*
2. *இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய வாக்குக்கு (கட்டளை,வார்த்தை) விரோதமாய் எழும்பினார்கள்(கலகம்பண்ணினார்கள்,எதிர்த்து பேசினார்கள்) (ஏரே26:5).* ***"நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே, மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்."எபேசியர் 2:3.*** *தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிவதை நம்முடைய கடமை (பிர12:13)*
3. *தேவன் தம்முடைய பிள்ளைகளை நேசிக்கிறார். அவர் தம்முடைய சிட்சையினால் தம்முடைய ஜனங்களை பரிசுத்தப்படுத்துகிறார். அவர் மனம்திருப்புதலை விரும்புகிறார். உண்மையான தேவனுடைய பிள்ளைகள் மனம் மாறுக்கின்றன(எபி12:7-11). ஆனால் சிலர் மனம்திரும்பாமல் இருக்கின்றன(வெளி16:9).*
4. *யுதாவின் மக்கள் தேவனை புறக்கணித்தனர். தேவன் அவர்களை புறக்கணித்தார்(புல2:6). கர்த்தர் நிர்முலமாக்க நினைத்தார்(2:8), கொம்பை முழுவதையும் வெட்டி போட்டார்(2:3), பகைஞனை போல ஆனார்கள்( 2:5).*
5. *தேவனுடைய கையிலிருந்து விழுகிறது பயங்கரமாய் இருக்கும் (எபி 10:32;எபி 12:29)*
6. *தேவனுடைய பிள்ளைகளை கஷ்டத்தில் அவர்களை பாதுகாக்கிறார். (வெளி 18:4;எசா52:11;யோவ 15;19)*
    a. *பார்க்கவும் (தானி 1:2-9)*
7. *ஏரேமியா நல்ல உதாரணம் (ஏரே 39:11,12)*

## ***அதிகாரம் 3***

## ***கர்த்தரை நம்புவதே நலம் (3:21-32) (ரோமர் 5:3,4)***

*a) உபத்திரவத்தில், கஷ்டத்தில், என் வெட்கத்தில், என் கசப்பில் நான் கர்த்தரை நம்புவேன் அதுவே நல்லது (புல 3:1-24) (ரோம5:3,4).*

*b) அவர் நம்மை கைவிடமாட்டார் (புல3:31). அவரே நமக்கு துணையாக நிற்கிறவர் . (2 தீமோ 4:17)*

*"அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்."*
*2 கொரிந்தியர் 1:10*

*c) இவரே ஆறுதல் தருபவர், ஆறுதலின் தேவன் (2 கொரி 1:3;7:6) (புல3:32). கர்த்தரை நம்புகிறவனை கிருபை சூழ்ந்து கொள்ளும் (சங் 32:10). அவரே காரியங்களை வாய்க்கப்பண்ண வல்லவர் (சங் 37:5). நீதிமனை தள்ளாட விடமாட்டார் (சங் 55:22)*

*d) நாம் தேவன் மேல் நம்பிக்கை வைப்பது தான் நலமாக உள்ளது (புல 3:26)*

*"கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை, ஆதலால், உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்."*
*சங்கீதம் 9:10*

*e) நாம் மனம்திரும்பி அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும். (புல 3:40,41)(சங் 119:104;ஏரே 6:16)*

## ***அதிகாரம் 5***

## ***பாவம் செய்தோம்; கிரீடம் விழுந்தது (புலம்பல் 5:16)***

## ***(ரோ3:23;ரோ 5:12)***

*1. கிரீடம் என்பது மகிமையை குறிக்கிறது. அதாவது கனம், புகழ் போன்றவற்றை குறிக்கும். எரே13:18-யில் மகிமையின் கிரீடம் என பார்க்கிறோம். தேவன் இஸ்ரவேலர்களை மகிமை உடையவர்களாக வைத்திருந்தார், பல ஆசிர்வாதங்களை கொடுத்திருந்தார் (உபா4:7,8;உபா14:2; உபா4:40;ஏசே16:12). ஆனால் அவர்கள் பாவம் செய்ததால் அந்த மகிமையை இழந்தார்கள். (புல5:16;ஏரே13:18;ரோ3:23) தேவன் முன்னமே இவர்களை எச்சரிக்கை செய்திருந்தார் (உபா11:28)*

*2. இன்று கிறிஸ்துவின் சபையார் அனைவரும் தேவனுடைய பிள்ளைகளாக, மகிமை உடையவர்களாக இருக்கிறோம். (எபே5:27;1பே2:9). தேவன் மகிமையான கிரீடத்தை கொடுத்திருக்கிறார் (ஏசா62:3,2). நாம் பாவம் செய்யாத படிக்கு மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.*

*3. பாவம் என்பது தேவனுடைய வார்த்தையை மீறுவது (1யோ3:4), ஆநீதி (1யோ5:17), விசுவாசத்தால் வராதது (ரோ14:23).*

*a) பாவம் நம்மையும் தேவனையும் பிரிக்கிறது (எசா59:1,2).*
*b) பாவம் வஞ்சிகிறது (எபி3:13).*
*c) பாவம் அடிமைபடுத்துகிறது (ரோ6:16,17).*
*d) மோசம் போக்குகிறது (எபே4:22).*
*e) நாகத்திற்கு கொண்டுசெல்கிறது (ரோ6:23).*

***4.** நாம் சிலநேரங்களில் பாவம் செய்கிறோம். நாம்(கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள்) தொடர்ந்து சத்தியத்தின்(வசனம் யோவா 17:17) ஒளியில் நடக்கும் போது நம்முடைய (கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களின்) பாவத்தை இயேசுவின் இரத்தம் தொடர்ந்து கழுவுகிறது (1யோவான்1:6-9).*

*5. கிறிஸ்துவுக்கு வெளியே இருப்பவர்கள் வசனத்திற்கு கீழ்படிந்து ஞாணஸ்நானம் எடுக்கும் போது, பாவம் மன்னிக்கப்படுகிறது, கிறிஸ்துவுக்குள் வருகின்றன.(அப்22:16;கலா3:27).*

***"எங்கள்பேரில் கடுங்கோபமாயிருக்கிறீரே!"**-புலம்பல் 5:22*

*6. பாவத்தில் இருப்பவர்கள் மீது தேவன் கடுங்கோபமாயிருக்கிறார். ஒருநாள் இது தெரியும் (2தெ1:7-10). ஏரேமியாவை போல நாம் ஆத்துமாக்களின் மீது கவலை பட வேண்டும் அவரை போல தேவனுடைய வேலையை செய்யவேண்டும்*